# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு : 36 /2022** **நாள்: 09.02.2022**

### நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல், 2022

**மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வைக்கப்படும் வாக்குச்சீட்டுகள், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை இரண்டாம் மற்றும் மூன்றாம் சுழற்சி அடிப்படையில் வார்டுவாரியாக ஒதுக்கீடு செய்தல், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் வார்டுவாரியான வேட்பாளர் விவரங்கள் பதிவு உள்ளிட்ட தேர்தல் ஆயத்தப்பணிகள் குறித்து கலந்தாலோசனைக்கூட்டம் இன்று (09.02.2022) காணொலி காட்சி வாயிலாக நடைபெற்றது.**

21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 489 பேரூராட்சிகளுக்கான நகர்ப்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல்களுக்கான வாக்குப்பதிவு 19.02.2022 அன்று ஒரே கட்டமாக நடைபெற உள்ளது. நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் ஆயத்தப் பணிகள் மற்றும் தேர்தலை நேர்மையான முறையில் நடத்துவது குறித்த கலந்தாய்வுக் கூட்டம் காணொலிக் காட்சி (Video conferencing) வாயிலாக தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் வெ.பழனிகுமார், இ.ஆ.ப.,(ஓ) அவர்கள் தலைமையிலும், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய செயலாளர் திருமதி. எ. சுந்தரவல்லி இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையிலும் அனைத்து தேர்தல் பார்வையாளர்கள், மாவட்ட தேர்தல் அலுவலர்கள்/மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுடன் இன்று (09.02.2022) கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்காணொலி ஆய்வுக்கூட்டத்தில், நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலை அமைதியாக நடத்துவதற்கு கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து விவாதிக்கப்பட்டு அறிவுரைகள் வழங்கப்பட்டன.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வைக்கப்படும் வாக்குச்சீட்டுகள், அஞ்சல் வாக்குச்சீட்டுகள், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை இரண்டாம் மற்றும் மூன்றாம் சுழற்சி அடிப்படையில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வார்டுவாரியாக ஒதுக்கீடு செய்யப்பட்டது குறித்தும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் வார்டுவாரியான வேட்பாளர் விவரங்களை பதிவு செய்தல், வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு இரண்டாம் கட்ட பயிற்சி வழங்குவதற்கு செய்யப்பட்ட முன்னேற்பாடுகள் விவரம், பெல் (BEL) நிறுவன பொறியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு, தொடர்பு அலுவலர் (Nodal Officer) நியமனம் செய்வது தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டது.

மேலும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம், தேர்தல் பொருட்கள், கோவிட் தொற்று பாதுகாப்பு உபகரணங்கள் இருப்பு விவரம், ஆகியவை தயார்நிலையில் உள்ளது குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

பதற்றமான வாக்குச்சாவடிகள் மற்றும் வாக்கு எண்ணுகை மையங்கள் இறுதி செய்த விவரம், வாக்குச்சாவடி சீட்டு அச்சிட்ட விவரங்கள், மண்டல அலுவலர்கள் கொண்ட குழு அமைப்பது, மற்றும் அவர்களுக்கான வழிகாட்டு வரைபடம் தயார் செய்வது குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்டன.

மேலும், நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்களை அமைதியாக நடத்துவதற்கு வாக்குச்சாவடிகள், வாக்கு எண்ணுகை மையங்கள் மற்றும் கட்டுப்பாட்டு அறைகளில் தகுந்த போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திடக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., பேரூராட்சிகளின் ஆணையர் டாக்டர். இரா.செல்வராஜ், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., கூடுதல் காவல்துறை இயக்குநர் (தலைமையிடம்) திரு ஜி. வெங்கட்ராமன், இ.கா.ப., காவல்துறை தலைவர் (தொழில்நுட்பம்) திருமதி மகேஸ்வரி, இ.கா.ப., காவல் கண்காணிப்பாளர் (சைபர் க்ரைம்) திருமதி சண்முகப்பிரியா, இ.கா.ப., முதன்மை தேர்தல் அலுவலர் (நகராட்சிகள்) திருமதி. கு.தனலட்சுமி, முதன்மை தேர்தல் அலுவலர் (ஊராட்சிகள்) திரு.கி.அ.சுப்பிரமணியம், சட்ட ஆலோசகர் திரு க. வெங்கடேசன், உதவி ஆணையர் (தேர்தல்) திரு. அகஸ்ரீ சம்பத்குமார் மற்றும் ஆணைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

9/2/2022

மக்கள் தொடர்பு அலுவலர்